(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

5 சைவசமய பாடப்பரீட்சை : 2024

தரம் ஐந்து



nselva.com

காலம் அளவு	1.00 மணி

புள்ளிகள் : 100

இல.
மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. 1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

1. ‘சலம் பூவொடு தூபம்’ என்ற தேவாரத்தை அருளியவர் யார்?
   1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரமூர்த்தி நாயனார்
2. விக்கினங்களைப் போக்குவதால் போற்றப்படும் நாமம் எது?
   1) விநாயகர் 2) விக்னேஸ்வரர் 3) பிள்ளையார்
3. மருத்துநீர் வைத்தல் செய்யும் சைவ மரபு எந்தப் பண்டிகையில் செய்யப்படுகின்றது.
   1) தீபாவளி 2) புதுவருடப்பிறப்பு 3) தைப்பொங்கல்
4. நகுலம் என்பதன் பொருளைக் குறிப்பது?
   1) கீரி 2) நந்தி 3) நத்தை
5. வைகாசி மூலம் குருபூசை தினமாக அமையும் நாயனார்.
   1) மாணிக்கவாசகர் 2) திருநாவுக்கரசர் 3) திருஞானசம்பந்தர்
6. இரு மகோற்சவம் நடைபெறும் பழமைவாய்ந்த சிவனாலயம் எது?
   1) நகுலேச்சரம் 2) திருக்கோணேச்சரம் 3) முன்னேச்சரம்
7. ‘தூலலிங்கம்’ என அழைக்கப்படுவது ஆலயத்தின் எப்பகுதி?
   1) மூலஸ்தானம் 2) நந்திபீடம் 3) கோபுரம்
8. பாண்டிய மன்னன் எந்நோயினால் ஆட்கொள்ளப்பட்டார்?
   1) வெப்புநோய் 2) சூலைநோய் 3) மஞ்சட்காமாலை
9. முன்னேச்சரத்தில் சிறப்பாக நடைபெறும் ‘‘வசந்த நவராத்திரி விழா” எம்மாதத்தில் கொண்டாடப்படும்?
   1) ஆடி 2) மாசி 3) சித்திரை
10. தானாகத் தோன்றிய இலிங்கம் காணப்படும் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?
    1) யாழ்ப்பாணம் 2) மட்டக்களப்பு 3) திருகோணமலை
11. இலக்கண முறைகளைச் சான்று பகரும் பழைமையான நூல் எது?
    1) கந்தபுராணம் 2) வீரசோழியம் 3) அபிராமி அந்தாதி
12. கந்தலாடையும் வாடிய தோற்றத்துடனும் துவாரகை அரண்மனை வாயிலில் நின்றவர் யார்?
    1) திரிசுரன் 2) குசேலர் 3) குபேரன்
13. வசந்த காலம் ஆரம்பிப்பதை உணர்த்துபவை எவை?
    1) காகங்கள் கரைதல் 2) சேவல்கள் கூவுதல் 3) குயில்கள் கூவுதல்

14. ''சூகர'' வேட்டைத்திருவிழா நடைபெறும் ஆலயம் எது?
    1) முன்னேச்சரம் 2) தான்தோன்றீஸ்வரம் 3) திருக்கோணச்சரம்
15. ''சமயக்குரவர்கள் நால்வர்'' என்பவற்றுள் அடங்காதவர்.
    1) அப்பர் 2) மாணிக்கவாசகர் 3) சேக்கிழார்
16. குமரகுருபரரால் பாடப்பட்ட பக்தி நூல்களாவன?
    1) கந்தபுராணம், கந்தர்கலிவெண்பா
    2) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லிமாலை
    3) கந்தர்கலிவெண்பா, வீரசோழியம்
17. கோயில்களில் உள்ள தல விருட்சங்களை வழிபாடு செய்வதற்கான சமய நம்பிக்கை எது?
    1) இறைவன் எல்லா உயிர்களிடத்திலும் இருப்பதால்
    2) அவை எமக்கு நிழல் தருவதால்
    3) அவற்றை நாம் தறித்துப் பயன்படுத்துவதால்
18. அப்பூதியடிகளின் பெருமையை திருநாவுக்கரசர் பாடியருளிய திருத்தலம் எது?
    1) திருநின்றவூர் 2) திருப்பழனம் 3) திருவாதவூர்
19. சைவத்தை விட்டு சமணசமயத்தைப் பின்பற்றிய மன்னர்களில் ஒருவர்.
    1) வரகுணபாண்டியன் 2) கூன்பாண்டியன் 3) மலையத்துவச பாண்டியன்
20. நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்பன.
    1) பஞ்சபூதங்கள் 2) பஞ்சகௌவியங்கள் 3) பஞ்சபுராணம்

(20X1= 20 புள்ளிகள்**)**

2. பின்வரும் கூற்றுக்கள் யாரால்? யாருக்கு? கூறியவை என எழுதுக.

1. தாங்கள் கட்டிய கோயில் எங்கே இருக்கிறது.
   யாரால்..... யாருக்கு.....
2. ''திகர சக்கரம்'' எனத் தொடங்கு
   யாரால்..... யாருக்கு.....
3. இப்போது இங்கு அவன் உதவான்
   யாரால்..... யாருக்கு.....
4. இசைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்
   யாரால்..... யாருக்கு.....
5. நடந்து வந்ததால் உனது கால்கள் வலிக்குமே
   யாரால்..... யாருக்கு.....

(5X2= 10 புள்ளிகள்**)**

3. வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?
   .....
2. சிவபெருமான் ஆன்மாக்களுக்குச் செய்யும் மூன்று தொழில்களும் எவை?
   .....
3. வீட்டுக் கிரியைகள் இரண்டின் பெயர் எழுதுக.
   .....

4. அகத்தே தியானிக்கும் சிவசின்னங்களில் ஒன்று.

.....

5. பஞ்சபுராணம் ஓதும் முறைகளில் மூன்றாவதாக பாடப்படுவது எது?

.....

6. நவராத்திரி விழாவின் பத்தாம் நாள் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

7. வியாச முனிவரால் புராணக்கதைகளைச் சுலோக வடிவிலே பாட ஏன் முடியாமல் போனது?

.....

8. ''நீறில்லா நெற்றிபாழ்'' எனக் கூறியவர் யார்?

.....

9. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?

.....

10. மங்கையர்கரசி வளவர்கோன்..... எனும் திருப்பாடலைப் பாடியவர் யார்?

.....

(10 X 2 = 20 புள்ளிகள்**)**

4. பின்வரும் அடிகளில் தொடங்கும் திருக்குறள்களை பூர்த்தி செய்க.

1. அறவாழி அந்தணன் .....

.....

2. பொறிவாயில் ஐத்தவித்தான் .....

.....

3. பிறவிப் பெருங்கடல் .....

.....

பின்வரும் குறளுக்குப் பொருள் தருக.

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே உலகு

   .....

   .....

2. கற்றதனால் ஆன பயன் என்கொல் வாலறிவன்
   நற்றாள் தொழா அர் எனின்.

   .....

   .....

(5X2= 10 புள்ளிகள்**)**

5. தொடர்பு படுத்துக

1. திருச்செந்தூர்	மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
2. திருக்கோவிலூர்	பூசலார்
3. மதுரை மீனாட்சி	கந்தர் கலி வெண்பா
4. திருஞானசம்பந்தர்	இலிங்கேஸ்வரர்
5. திருநின்றவூர்	பிடியதன் உருவுமை

(5 X 1 = 5 புள்ளிகள்)

6. பின்வரும் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

புதிருண்ணல்	அருணகிரிநாதர்	சேக்கிழார்	ஏமநாதன்	பூந்தோட்டம் அமைத்தல்
கைவிசேடம்				

1. திருப்புகழைப் பாடியவர் ..... ஆவார்.
2. வட நாட்டிலிருந்து வந்த இசை மேதை ..... ஆவார்.
3. கோயில்களில்..... சரியைத் தொண்டுகளில் ஒன்றாகும்.
4. தைப்பூசத்தன்று வீட்டில் செய்யப்படும் கிரியைகளில் ஒன்று ..... ஆகும்.
5. புதுவருட தினத்தன்று இந்துக்கள் ..... வாங்குதல் சைவ மரபாகும்.

(5 X 2 = 10 புள்ளிகள்)

7. பின்வரும் தேவாரத்தினைப் பூர்த்தி செய்க

சிவனடியே ..... **திருப்பெருகு சிவஞானம்**

பவம் அதனை ..... **பாங்கினில்** ..... **ஞானம்**

உவமை இலாக் ..... **உணர்வரிய மெய்ஞ்ஞானம்**

..... **சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்**

(5 X 1 = 5 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி ஐந்து வாக்கியம் எழுதுக

1. அப்பூதியடிகள் **2. முன்னேச்சரம்**

.....

.....

.....

.....

.....

.....

(10 புள்ளிகள்)

9. பின்வரும் திருப்பாடல்களில் ஒன்றை வரிக்கிரமமாக எழுதுக?

1. சலம்பூவொடு 2. கங்கையை சடையில் வைத்தார் 3. பிடியதன் உருவுமை

.....

.....

.....

.....

.....

(10 புள்ளிகள்)